இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 07.11.2026

உடையும் டிரம்ப் பிம்பம்!

அமெரிக்க இடைக்காலத் தேர்தல் முடிவுகள் அதிபர் டிரம்புக்கு மிகப்பெரிய பின்னடைவு கொடுத்துள்ளது. ஆளும் குடியரசுக் கட்சியானது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பெரும்பான்மையை இழந்து தோல்வியைச் சந்தித்துள்ளது. அமெரிக்காவின் ரட்சகராகக் கொண்டாடப்பட்ட டிரம்ப் பெருந்தோல்வியைத் தழுவி இருக்கிறார்.

அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவையில் (கீழவை) உள்ள 435 இடங்களுக்கும், செனட்டில் (மேலவை) உள்ள 35 இடங்களுக்கும், 36 மாகாண ஆளுநர் பதவிக்கும் இடைக்காலத் தேர்தல் கடந்த 3ஆம் தேதியன்று நடைபெற்றது. 21 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி வாய்ந்தவர்கள். இந்தத் தேர்தல் முடிவானது அதிபர் டிரம்பின் ஆட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போவதாக அமைந்துள்ளது.

டிரம்ப்பின் குடியரசுக் கட்சி பெரும் தோல்வியைத் தழுவி இருக்கிறது. கீழவையில் 253 இடங்களை ஜனநாயகக் கட்சி கைப்பற்றி உள்ளது. டிரம்பின் குடியரசுக் கட்சி 157 இடங்களை மட்டுமே கைப்பற்றி உள்ளது. இதன்படி கீழவையானது ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு வந்துவிட்டது.

செனட் அவைக்கு நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சி 20 இடங்களையும், குடியரசுக் கட்சி 13 இடங்களையும் கைப்பற்றி உள்ளன. இந்த அவையில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 100. பெரும்பான்மைக்கு தேவையான எம்.பி.க்களின் எண்ணிக்கை 50. ஜனநாயகக் கட்சி 54 இடங்களை இப்போது வைத்துள்ளது. குடியரசுக் கட்சிக்கு 44 எம்.பி.க்களே உள்ளனர்.

குடியரசுக் கட்சியின் கோட்டை என்று சொல்லப்பட்ட மாகாணங்களை ஜனநாயகக் கட்சி கைப்பற்றி இருக்கிறது.

இந்தத் தேர்தலில் மிக முக்கியமான சிறப்பு, இந்திய அமெரிக்கர்கள் கணிசமான அளவுக்கு வெற்றி பெற்றுள்ளார்கள். கீழவை, மேலவையிலும் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆளுநராகவும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

பல முக்கியமான திருப்புமுனைகள் இந்தத் தேர்தலில் நடந்துள்ளன. அமெரிக்காவின் வரலாற்றில் கருப்பினத்தைச் சேர்ந்த இருவர் முதன்முதலாக ஆளுநராக ஆகி இருக்கிறார்கள். ஜார்ஜியா, நிவேடா மாகாணங்கள் அந்தப் பெருமையை அடைந்துள்ளன. தன்பாலின ஈர்ப்பாளர் ஒருவர் செனட் அவைக்கு முதன்முதலாகத் தேர்வாகி இருக்கிறார். முதன்முதலாக இசுலாமியர் ஒருவர் செனட் அவைக்குத் தேர்வாகி இருக்கிறார்.

அமெரிக்க ஜனநாயக சோசலிஸ்டுகள் அமைப்பால் ஆதரிக்கப்பட்ட 5 பேர் வெற்றி பெற்றுள்ளார்கள். அதாவது 5 சோசலிஸ்டுகள் வெற்றி பெற்றுள்ளார்கள். இதன் மூலமாக சோசலிஸ்டுகளின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. இடது சாரிச் சிந்தனையின் வளர்ச்சியாக இதைக் கணிக்கிறார்கள்.

இதன் அடிப்படையில் இரு அவைகளும் ஜனநாயக் கட்சியின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. இந்தத் தேர்தல் முடிவுகள் டிரம்பின் பதவியைப் பறிக்கவில்லை. அவர் பதவி விலகத் தேவையில்லை. ஆனாலும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவரால் சுதந்திரமாக எந்த முடிவையும் எடுக்க முடியாது. அவர் எடுக்கும் முடிவுகளுக்கு அமெரிக்க நாடாளு மன்றம் தலையாட்டி ஒப்புதலைக் கொடுக்காது. ஜனநாயக் கட்சியின் ஆதரவின்றி குடியரசுக் கட்சியின் அதிபரான டிரம்பால் செயல்பட முடியாது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சட்டமியற்றும் அதிகாரமும், நிதிகளை விடுவிக்கும் அதிகாரமும் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உண்டு. எனவே நினைத்த மாதிரி டிரம்பால் செயல்பட முடியாது.

போர் பூச்சாண்டியைக் காட்டியே மக்களை ஏமாற்றி விடலாம் என்று டிரம்ப் நினைத்தார். அதை மக்கள் ஏற்கவில்லை. போர் சாகசங்கள் மூலமாக மக்களை மயக்கி வைத்திருக்கலாம் என்று நினைத்தார் டிரம்ப். அதை மக்கள் நிராகரித்து விட்டார்கள். சொந்த நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் அடுத்த நாடுகளின் பிரச்சினையில் அதிகம் மூக்கை நுழைத்ததற்கு மக்கள் காட்டிய எதிர்ப்பு தான் இந்த முடிவுகள்.

இஸ்ரேலுடன் சேர்ந்து ஈரான் மீது அமெரிக்கா தொடுத்த போரானது உலகப் பொருளாதாரத்தை மட்டுமல்ல; அமெரிக்காவையும் அதிகமாகப் பாதித்துள்ளது. இந்தியா உள்ளிட்ட மற்ற நாடுகள் மீது அதிகப்படியான வரிகளை டிரம்ப் விதித்தார். அது தனக்குத் தானே வைத்துக் கொண்ட வேட்டு ஆகும். 'அமெரிக்கர்களுக்கே எல்லாம்' என்பதும் வேலைக்கு ஆகவில்லை. அது மக்களை ஏமாற்றும் தந்திரமாக மட்டுமே இருந்துள்ளது. எரிபொருள் விலை அதிகம் ஆகி உள்ளது. உணவுப் பொருட்கள் விலையும் அதிகம் ஆகி உள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட அமெரிக்க மக்கள் தங்களது கோபத்தை இந்த இடைக்காலத் தேர்தலில் காட்டி விட்டார்கள்.

"மக்கள் நலனுக்குச் செலவு செய்யப் பணம் இல்லை என்று அமெரிக்க அரசு சொன்ன போதுதான் உலகக் கோடீஸ்வரர்களின் பட்டியலில் முதல் இடத்தை எலான் மஸ்க் பெற்றார். அரசியல்வாதிகளை உலகக் கோடீஸ்வரர்கள் விலைக்கு வாங்குவதை மக்கள் விரும்பவில்லை. தங்களின் பணம் பள்ளிகளைக் கட்டவும், சாலைகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படாமல் போர்க் குற்றங்களுக்கும் இனப் படுகொலை களுக்கும் செலவு செய்யப்படுவதை எதிர்த்து அமெரிக்க மக்கள் வாக்களித்திருக்கின்றனர்" என்று நியூயார்க் மேயர் சோரன் மம்தானி சொன்ன சொல் முழுக்க முழுக்க உண்மை.

எந்த டிரம்ப்பை கொண்டாட்டத்துடன் கொண்டு வந்தார்களோ, அவரையே அமெரிக்க மக்கள் நிராகரித்துள்ளார்கள்.

மக்களைப் பற்றிக் கவலைப்படாமல், மக்களுக்கான எந்த திட்டமிடுதலும் இல்லாமல் போலியாகக் கட்டமைக்கப்பட்ட டிரம்ப் பிம்பம் நொறுங்கி இருக்கிறது. வெற்று விளம்பரங்கள் மூலமாக ஊதிப் பெரிதாக்கப்பட்ட பிம்பங்களை, மக்களே விரைந்து நிராகரிப்பார்கள் என்பதைத்தான் டிரம்பின் தோல்வி காட்டுகிறது.

●●



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், திருமதி. துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தமது இல்லத் திருமண வரவேற்பு விழாவையொட்டி அழைப்பிதழை நேரில் சந்தித்து வழங்கினார்.

த.வெ.க. ஆட்சியில் போதைப்பொருள் கலாச்சாரம் தலைவிரித்தாடுகிறது!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விமர்சனம்!

சென்னை, நவ.7-

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கலந்துரையாடல் வீடியோவில் பேசியதாவது:-

ரீல்ஸ் ஆட்சியினால் பாதிக்கப்படும் தமிழ்நாட்டுப் பெண்களின் உண்மையான உளக்குமுறல் இதுதான். த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை.. மாணவ, மாணவிகளுக்கும் பாதுகாப்பு இல்லை.

த.வெ.க. ஆட்சியில் போதைப் பொருள் கலாச்சாரம் தலைவிரித்தாடுகிறது . பொதுமக்கள் வேதனை தெருவில் நடந்துசெல்லவே பயமாக இருக்கிறது. வெளியே சென்றால் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன்தான் செல்ல வேண்டும்.

விலைவாசி விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது. அன்றாட செலவுகளுக்கே வட்டிக்கு கடன் வாங்குகிறோம்.

எங்கள் வீட்டு பிள்ளைகள், படித்து முடித்து வேலைவாய்ப்பு இல்லாமல் தவிக்கின்றனர். த.வெ.க. ஆட்சியில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. பொதுமக்கள் மாற்றம் என கூறி த.வெ.க.விற்கு தெரியாமல் ஓட்டுப்போட்டு இப்போது தத்தளிக்கிறோம் என பெண்கள் குமுறுகின்றனர்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.



தரங்கெட்ட வெங்காயத்தை அதிக விலை கொடுத்து வாங்கி ஊழல்!

இலவச அரிசியை 'பொன்னி அரிசி ரூ.30' என விற்று கொள்ளையடிப்பதுதான் தூய ஆட்சியா?

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை, நவ. 7 -

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

கடந்த தி.மு.கழக ஆட்சி காலத்தில் நியாய விலைக் கடைகளில் கருப்பு, கல் இல்லாத அரிசி எடை குறையாமல் இருக்க நியாய விலைக்கடையில் உள்ள எடை இயந்திரத்தோடு பில்லிங் இயந்திரம் இணைக்கப்பட்டு (POS) எடை குறைவில்லாமல் சுமார் 2 கோடியே 29 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சுமார் 35,000 நியாய விலை கடைகள் மூலம் உணவு பொருட்கள் வழங்கப்பட்டதோடு, 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு தாயுமானவர் திட்டத்தின் மூலம் வீடுகளுக்கே ரேஷன் பொருட்களை வழங்கியவர் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பது உங்களுக்கு தெரியுமா CM சார்?

த.வெ.க. ஆட்சி அமைந்ததும் மத்திய தொகுப்பில் இருந்து அனுப்பப்பட்ட அரிசியை விலை இல்லாமல் கொடுப்பதற்கு பதில், சன்னரக பொன்னி அரிசி என்று ஏழை மக்களை ஏமாற்றி கிலோ ரூபாய் 30



க்கு விற்பனை செய்து கொள்ளையடிப்பதுதான் தூய ஆட்சியின் லட்சணமா CM சார் ?

தரங்கெட்ட வெங்காயத்தை மக்கள் வரிப்பணத்தில் அதிக விலை கொடுத்து வாங்கி ஊழல் செய்து நியாய விலைக் கடை மூலம் விநியோகம் செய்து விட்டு பணியாளர்கள் மீது குற்றம் சுமத்தி பணிநீக்கம் செய்திருப்பதும், வெங்காய கொள்முதல் டெண்டரை ரத்து செய்திருப்பதும் உங்களுக்கு வெட்கமாக இல்லையா CM சார்? ஊழல் செய்ய மாட்டேன், செய்ய விடவும் மாட்டேன், செய்தவர்களையும் விட மாட்டேன் என்று காட்டு கத்துக்கத்திய முதல்வரே!

நீங்கள் பதவி நீக்கம் செய்ய வேண்டியது சாதாரண நியாய விலைக் கடை பணியாளர்கள் அல்ல ஊழல் செய்த அமைச்சரை பதவி நீக்கம் செய்து விலையில்லா அரிசியை சன்னரக பொன்னி அரிசி என்று ஏமாற்றி விற்க வைத்த அதிகாரி களையும், தரங்கெட்ட வெங்காயத்தை கொள்முதல் செய்து கொள்ளையடித்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுத்து நான் தூய ஆட்சிதான் நடத்துகிறேன் என்று நிரூபிக்க தயாரா CM சார்?

இவ்வாறு அவர் தனது வலைதளத்தில் கூறியுள்ளார்.

இலவச வேட்டி - சேலை திட்டம்: கோ-ஆப்டெக்ஸ் மூலமாக வாங்காமல்

தனியார் நிறுவனத்திடம் இருந்து த.வெ.க. அரசு கொள்முதல்!

சென்னை, நவ. 7 -

த.வெ.க. அரசின் அண்ணன் சீர் பட்டு, இலவச வேட்டி சேலை கோ-ஆப்டெக்ஸ் மூலமாகதான் வாங்கப்படுவதாக, தமிழக அரசு ஏற்கனவே தெரிவித்திருந்தது. ஆனால் தற்போது, அண்ணன் சீர் பட்டு சேலை திட்டத்திற்கு தமிழக நெசவாளர்களிடம் இருந்து கோ-ஆப்டெக்ஸ் மூலமாக கொள்முதல் செய்யாமல் தனியாரிடமிருந்து கொள்முதல் செய்வது தெரியவந்துள்ளது. அதன்படி, அண்ணன் சீர் பட்டு சேலை திட்டத்தில் ஒரு பட்டு சேலை 5 ஆயிரத்து 725 ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. ஆனால், அரசின் கோ-ஆப்டெக்ஸ் தயாரித்தால் தரமான சேலை குறைந்த விலையில் தர முடியும், மின் கொள்முதல், விலையில்லா மாணவர்கள் சைக்கிள், தங்க மோதிரம் திட்டம் போன்று தனியாரிடம் ஒப்படைத்தால் மறைமுகமாக பல்வேறு பலன்கள் கிடைக்கும் என்பதற்காகவா? என்று கேள்வி எழுந்துள்ளது. தனியார் நிறுவனத்திற்கு இத்திட்டத்தை தந்தால் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர்களின் வாழ்வாதாரம் கேள்வி குறியாகும் என்றும் கோ-ஆப்டெக்சிடம் தராதது ஏன்? என்பது குறித்து த.வெ.க. அரசு விளக்கம் தர வேண்டும் என நெசவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காஞ்சிபுரம் பட்டு சேலைகள் உலகப் புகழ் பெற்றவை, பட்டு நெசவுத் தொழில் அழியும் தருவாயில் உள்ளது, கோ-ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டாமா? கைத்தறி மற்றும் நெசவாளர் துறையை நம்பாமல் தனியாரிடமிருந்து கொள்முதல் செய்ய த.வெ.க. விஜய் அரசு முன் வந்து இருப்பதன் நோக்கம் என்ன? இதிலும் தமிழக நெசவாளர்களை புறக்கணித்து ஆந்திர ரெட்டி ஆலோசகர் மூலம் ஆந்திரா கர்நாடகா ஆட்களுக்கு வியாபாரம் கொடுக்கவா? தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் எப்படி ஜாய் ஆலுக்காஸ் தனியார் நிறுவனத்திற்கு கொடுத்தது போன்று பட்டுப்புடவைக்கும் தனியார் பட்டு சேலை கடையுடன் கைக்கோர்ப்பா? என்று பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆந்திராவில் கரை ஒதுங்கிய காசிமேடு மீனவர்களின் சடலங்கள்!

மீனவர்கள் உயிரிழப்பிற்கு அரசு அதிகாரிகளின் அலட்சியம்தான் காரணம்!

அமைச்சர் மரிய வில்சனை முற்றுகையிட்டு மீனவர்கள் வாக்குவாதம்!

சென்னை, நவ. 7 -

முரசு புயலில் சிக்கி உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினரை சந்திக்க வந்த அமைச்சர் மரியவில்சனை மீனவர்கள் முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 29ஆம் தேதி சென்னை காசிமேடு மீன் பிடித் துறைமுகத்தில் இருந்து செல்வழகன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ஆழ்கடலுக்கு 9 மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். கரை திரும்பவேண்டிய மீனவர்கள் திரும்பாததால் அவர்களை கண்டுபிடித்து தரக்கோரி, காசி மேடு மீனவர்கள் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனிடையே, ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டம் கொத்தாபுரம் அருகே மீனவர் களின் உடல்கள் கரை ஒதுங்கியுள்ளன. இதனைத் தொடர்ந்து, மீனவர்களின் குடும்பத்தாரை நேரில் சந்திக்க வந்த ஆர்.கே.நகர் தொகுதி த.வெ.க. உறுப்பினரும் நிதி அமைச்சருமான மரிய வில்சனை மீனவர்கள் முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். விசைப் படகில் தண்ணீர் ஏறுகிறது காப்பாற்றுங்கள் என்று வயர்லெஸ் மூலமாக மீனவர்கள், மீன்வளத் துறை அதிகாரியிடம் தெரிவித்தும் கூட, அதிகாரிகள் துரிதமாக செயல்படவில்லை என அவர்கள் குற்றம் சாட்டினர். த.வெ.க. அரசு மீனவர்களை காப்பாற்ற எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், கரை ஒதுங்கிய உடலைக்கூட அதிகாரிகள் கண்டுபிடிக்காமல், ட்ரோன் விட்டு பார்க்கிறோம் என்று கூறியதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.